## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 04.08.2017 | தூய ஜான்மரிய வியானி - திருப்பலி | 02 |
| 06.08.2017 | ஆண்டவரின் உருமாற்றம் திருவிழா - திருப்பலி | 03 |
| 10.08.2017 | தூய லாரன்ஸ் திருத்தொண்டர் திருவிழா - திருப்பலி | 05 |
| 11.08.2017 | தூய கிளாரா கன்னியர் - திருப்பலி | 06 |
| 13.08.2017 | ஆண்டின் பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு - திருப்பலி | 07 |
| 15.08.2017 | தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா-திருப்பலி | 09 |
| 15.08.2017 | சுதந்திர தினவிழா - பள்ளி வழிபாடு | 10 |
| 20.08.2017 | ஆண்டின் பொதுக்காலம் 20ஆம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 22.08.2017 | அரசியான தூய கன்னிமரியாள் - திருப்பலி | 13 |
| 24.08.2017 | தூய பர்த்தலமேயு திருவிழா - திருப்பலி | 14 |
| 27.08.2017 | ஆண்டின் பொதுக்காலம் 21ஆம் ஞாயிறு - திருப்பலி | 16 |
| 28.08.2017 | தூய அகுஸ்தினார் - திருப்பலி | 17 |
| 29.08.2017 | திருமுழுக்கு யோவானின் பாடுகள் - திருப்பலி | 18 |


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. ஆண்டவரின் உருமாற்றமும் நமது உருமாற்றமும் 19
2. மரியாளின் அரசு எத்தகைய அரசு? 22
3. புனித அகுஸ்தினார் 25
4. திருச்சபைச் செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

**04.08.2017 தூய ஜான்மரிய வியானி திருப்பலி**

**முன்னுரை**

திருமதி. ராணி வில்சன்

"நாடு மறைமாநிலம் முழுவதும் மனந்திரும்ப வேண்டுமா? அவ்வாறாயின் எல்லாப் பங்குத்தந்தையரும் புனிதர்களாக வாழ வேண்டும்" என்று தன் ஆயரிடம் தெரிவித்து, பங்குத் தந்தையாக புனிதத்தில் நிலைத்து நின்று, இன்று விழாவினைக் கொண்டாடும் அளவிற்கு பங்குத்தந்தையர்களின் பாதுகாவலராக இருப்பவர் தூய ஜான்மரிய வியானி. சிறுவயதில் படிப்பறிவு குறைவே. ஆயினும் தனது 18வது வயதில் குருமடத்திற்கு சென்றபோது இலத்தீன் படிப்பறிவு குறைவு என திருப்பி அனுப்பப்பட்டார். ஆனால் இவரது ஆழ்ந்த ஞானத்தையும், விவேகத்தையும் கண்டறிந்த இவரது ஆசிரியர் இவருக்குத் தனிப்பட்ட முறையில் தாய் மொழியில் இறையியலைக் கற்றுத்தந்தார். பின் 25வது வயதில் குருப்பட்டம் பெற்றார்.

பிரான்சில் லயன்சு என்ற ஊருக்கருகிலுள்ள ஆர்சு என்ற சிற்றூரில் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றார். அது கிளைப்பங்கு 230 இறைமக்களைக் கொண்டது. பாட்டிகள் மட்டுமே கோவிலுக்கு வருவார்கள், நாளடைவில் நம் புனிதரின் செபம், கடுந்தவம், அயராத உழைப்பு இவற்றால் நம்பிக்கையால் பங்கில் நிலவிய நாத்திகம், சூதாட்டம், குடிவெறி போன்ற பல தீமைகள் சிறிது சிறிதாக ஒழிந்தன. 10 ஆண்டுகளில் இவரது முயற்சியால் பலர் மனம் மாறினர், ஞாயிறுத் திருப்பலியைக் கடைப்பிடித்தனர், புதுமையான முறையில் பாவிகள் மனம் திரும்பினர். பாவிகள் மட்டுமன்று அனைவரும் அவரின் அறிவுரையை நாடி வந்தனர். லயன்சு நகரில் புகைவண்டிப் பயணச்சீட்டுகள் ஒரு வாரத்திற்கு முன்பே முன்பதிவு செய்வதுபோல மக்கள் இவரைத் தேடி வந்தனர்.

அதிகாலை 1மணிக்கு இவர் தம் இருப்பிடம் விட்டு ஆலயத்திற்குக் கிளம்புவார், ஆலயம் சென்றதும் மணியடித்துவிடுவார். சிலமணி நேரமே ஓய்வு. பல சோதனைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து பாவமன்னிப்பு கேட்பார். இரண்டு மெழுகுத்துண்டுகள் ஒன்றாக இணைக்கப்பட்டால், பிரிக்க இயலாமல் ஒன்றாகிவிடுவதுபோல இறைவனுடன் மனித ஆன்மா ஒன்றித்திருக்கும். பலவீனமான மனித ஆன்மாவுடன் இறைவன் இணைக்கப்பட்டார் என்றால் எவ்வளவு மகத்தானச் செயல். இது நமது அறிவுக்கு எட்டாதது. இப்புனிதரின் சொல்லையும், செயலையும் நமது வாழ்வாக்குவோம். கடுமையான இச்செயலாக்கத்திற்கு இறைவனின் கொடையை பெற மனதுருகி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. குருக்களுக்கெல்லாம் பெரிய குருவான இறைவா, உமது பிரதிநிதியாக உம்மால் நியமிக்கப்பட்டிருக்கும் எம் திருஅவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை உம் கரத்தில் ஒப்படைத்து மன்றாடுகிறோம். உலக அமைதிக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் எடுக்கின்ற செபம், தவம், கடும் உழைப்பு அனைத்தையும் நீர் கண்ணோக்கிப் பார்த்து புனித மரிய வியானிக்கு துணை நின்றதுபோல இவருக்கும் உமது அன்பையும் இரக்கத்தையும் அருளையும் பொழிந்து ஆசீர்வதித்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்கள் குடும்பத்தின் தலைவரே இறைவா, உலகத் திருஅவையின் ஓர் அங்கமாக இருக்கும் எங்களையும் எங்கள் குடும்பங்களையும், எம் பங்கையும் ஆசீர்வதித்து புனிதரைப்போல கடும் முயற்சிகளை மேற்கொண்டு புனிதத்தை அணிந்து வாழவும், பிறரையும் இவ்வழியில் நடத்திச் செல்லவும் வேண்டிய வரங்களைப் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, எங்கள் மாநிலம் நல்ல தலைமையை இழந்து, மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படைச் சுகாதார மருத்துவ வசதிகளை இழந்து, உரிமைகள் மறுக்கப்பட்டு அனைத்து மக்களும் போராடிப் பெற வேண்டிய நிலையில் உள்ளனர். எங்களுக்கு நியாயமாய் கிடைக்க வேண்டிய அனைத்து உரிமைகளும் புனிதமான தலைமையும் கிடைக்க உம்மை மன்றாடுகிறோம்.

## 06.08.2017 ஆண்டவரின் உருமாற்றம் திருவிழா — திருப்பலி

**முன்னுரை** — திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

I. தானி. 7:9-10,13-14 II. 2பேதுரு 1:16-19 மத் 17: 1-9

மாற்றம் ஒன்றே மாறாதது. உளியால் சிதைக்கப்படும் மலை சிலையாகி பக்தர்களை ஒன்றிணைக்கும் வளையாகிறது. மண்ணில் புதைக்கப்படும் விதை மரமாகி பலநூறு கனிகள் தந்து பல்லாயிரம் விதைகளைக் கொடுக்கிறது. கருவில் வளரும் ஓருயிர் கல்லறைக்குச் செல்லும்முன் பலநிலைகளைக் கடந்து, சரித்திரம் படைத்து சந்ததிகளைப் பெருகச் செய்து தான் மறைந்தாலும் தன் புகழ் நிலைத்திருக்கச் செய்கின்றது. குதிரையிலிருந்து விழுந்த சவுல் பவுலாக மாறி திருச்சபையின் இரு தூண்களில் ஒன்றாக விளங்குகின்றார். மீன்களைப் பிடித்துக்கொண்டிருந்த சீமோன், இயேசுவால் மனிதர்களைப் பிடிப்பவராக மாற்றப்படுகின்றார். சந்தேக தோமையார் இயேசுவின் திருக்காட்சியால் என் ஆண்டவரே, என் தேவனே என்று தன்னையே கையளித்து வேதசாட்சியானார்.

தன்னுடைய மாட்சிமையைச் சிக்கெனப் பிடித்துக்கொள்ளாமல் அடிமைக்கோலம் பூண்ட இறைமகன் இயேசு, தன் திருமுழுக்கின்போது "இவரே என் அன்பார்ந்த மகன்" என்று தந்தையால் அறிக்கையிடப் படுகின்றார். இயேசு தான் பாடுகள் படுமுன் தன் சீடர்களாகிய பேதுரு, யாக்கோபு, யோவான் இவர்களைக் கூட்டிக்கொண்டு தாபோர் மலைக்குச் சென்று அங்கு தன் தெய்வீகத் தோற்றத்தில் காட்சியளிக்கின்றார். விண்ணகத் தந்தை, "இவரே என் அன்பார்ந்த மகன், இவரில் நான் பூரிப்படைகின்றேன்" என்று முழங்குகின்றார். இந்நிகழ்வை நினைவுகூறும் இந்நன்னாளில் நாம் நம்மை எவ்வாறு மாற்றியுள்ளோம், நம் மனமாற்றம் பிறருக்கு எவ்வாறு இயேசுவை அடையாளப்படுத்துகின்றது என சிந்திப்போம், செயல்படுவோம், நாமும் மாறுவோம், பிறரையும் மாற்றுவோம் என்று உறுதியோடு இறைவனின் துணைவேண்டி பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. தன் சீடர்களும் தன்னைப்போல் ஏழ்மை, எளிமை மற்றும் தியாகத்துடன் இறைப்பணி செய்ய வேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார். கான்ஸ்டான்டின் என்ற அரசரின் விருப்பத்திற்கிணங்க ஆடம்பர உடைகள், அணிகலன்கள், சொகுசு வாழ்க்கைக்கு மாறிவிட்ட சீடர்கள் இறைப்பணி செய்வதிலும், சமூகப்பணி செய்வதிலும், சோர்வுற்று அவற்றை அலட்சியப்படுத்துவதால் பல ஆலயங்கள் உடற்பயிற்சி கூடங்களாகவும், அரங்குகளாகவும் உருமாறும் நிலையிலிருந்து திருச்சபையைக் காக்க எல்லாம் வல்ல இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. பெயர்கூடத் தெரியாத போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வாலிப பருவத்தில் முதியவர்களைப்போல் காட்சிதரும் நம் சந்ததிகள் இறைபக்தி, இறை ஊழியம், உடல் ஆரோக்கியம், கல்வி, ஞானம் இவற்றில் வளர்ச்சியடைந்து நாட்டிற்கும், வீட்டிற்கும் பயனளிப்பவர்களாக வாழ அவர்களின் வாழ்வை மாற்ற, எல்லாம் வல்ல இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கணவன் மனைவியிடையே விட்டுக்கொடுக்கும் மனமின்மை, பெற்றோர் பிள்ளைகளிடையே பந்த பாசமின்மை, உற்றார் உறவினர் நண்பர்களிடையே மனிதநேயமின்மை இவற்றினால் விவாகரத்து, குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லமென்று அதிகரிக்கும் நிலைமாற எங்கள் உள்ளங்களில் அன்பு, பரிவு, இரக்கம் சுரக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மழை பொய்த்ததால் வறண்டுபோன நிலங்கள், சூறாவளியால் சாய்ந்துப்போன மரங்கள், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட

சாலைகள், கடும் வெப்பத்தினால் நோயுற்ற மனிதர்கள் என்று பல சீரழிவுகளுக்கு உள்ளாகி மகிழ்ச்சியிழந்து உயிர்வாழும் எங்களின் நிலைமாற இயற்கையைப் பாதுகாக்கும், பேணிவளர்க்கும் உள்ளம் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 10.08.2017 தூய லாரன்ஸ் திருத்தொண்டர் திருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" என யோவான் நற்செய்தியில் 12:24-26ல் இயேசு கூறுகிறார். "தமக்கென்று வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவார், இவ்வுலகில் தம் வாழ்வை ஒரு பொருட்டாக கருதாதோர் நிலைவாழ்வைப் பெறுவர்" என்பதற்கிணங்க வாழ்ந்தவர் புனித லாரன்ஸ். இவர் திருத்தொண்டர்களுள் ஒருவர். அரசன் வலேயரின் காலத்து மறைக்கலகத்தின்போது வாழ்ந்தவர். இவரது பிறப்புப்பற்றி ஏதும் கொடுக்கப்படவில்லை. ஏழாவது திருத்தொண்டரான லாரன்சினுடைய மறைச்சாட்சியத்தை மிலான் ஆயர் அம்புரோஸ் நமக்குத் தருகிறார். திருத்தந்தை இரண்டாம் சிக்ஸ்துஸ் கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டபோது "தூய குருவே, உமது திருத்தொண்டர் இல்லாது நீர் மட்டும் செல்வதேன்" என்று லாரன்ஸ் கேட்டார். அதற்கு "நீ மூன்று நாட்களில் என்னைப் பின்செல்வாய்" என்று திருத்தந்தை பதில் கூறினார்.

ஆலயத்தில் உள்ள விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் தம்மிடம் ஒப்படைக்கும்படி லாரன்ஸ்க்கு அரசன் உத்தரவிட்டான். லாரன்ஸ் அனைத்தையும் ஏழைகளுக்கு ஏற்கனவே பகிர்ந்தளித்திருந்ததால் அந்த ஏழைகளை அரசன்முன் கொண்டு சென்றார். "இவர்களே திருச்சபையின் விலையுயர்ந்த சொத்துக்கள்" என்றார். அரசனுக்குக் கோபம் தலைக்கேறியது. அரசனின் உத்தரவுப்படி இரும்புகட்டிலின் கீழே நெருப்பு மூட்டி அதன்மேல் லாரன்ஸைக் கிடத்தினார்கள். கொடுமைக்காரர்கள் கைத்தட்டிச் சிரித்தார்கள். லாரன்ஸோ, ஒரு பக்கம் வெந்துவிட்டது, மறுப்பக்கமும் வெந்துவிட திருப்பிப்போடுங்கள் என்று தம்மைக் கொடுமைப்படுத்தியவரிடம் கூறினார். திருத்தந்தைச் சொன்னபடியே அவர் மறைசாட்சியான மூன்று நாட்கள் கழித்து ஆகஸ்ட் 10ந்தேதி லாரன்ஸ் மறைச்சாட்சியானார். குறைவாக விதைப்போர் குறைவாக அறுவடைச்செய்வர், நிறைவாக விதைப்போர் நிறைவாக அறுவடைச் செய்வர் என்பதுபோல் நாமும் திருத்தொண்டர் புனித லாரன்ஸைப்போல் வாழ்ந்து விண்ணரசில் நிறைவான வாழ்வை அடைய இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. எனக்குத் தொண்டுபுரிவோர் என்னைப் பின்பற்றட்டும் என்று கூறிய இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தம்மை முழுவதும் அர்ப்பண வாழ்வுக்குக் கையளித்து தாழ்ச்சியோடு உம்மைப் பின்செல்ல அருள்புரியுமாறு புனித லாரன்ஸ் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. விதைப்பவர்களுக்கு விதையையும், உண்போருக்கு உணவையும் வழங்குபவரே, எம் பூமி செழிக்க, பயிர்விளைய தண்ணீர் பஞ்சம் நீங்க நல்ல வான்மழையைப் பொழியும்படி புனித லாரன்ஸ் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் ஆண்டவரே இறைவா, நாங்கள் எல்லோரும் எம்மிடமிருக்கும் தேவைக்கதிகமான செல்வங்களை மனநிறைவோடு ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் நல்ல மனநிலையைத் தரும்படி புனித லாரன்ஸ் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 11.08.2017 தூய கிளாரா கன்னியர் திருப்பலி

**முன்னுரை** **திருமதி. ராணிவில்சன்**

புனித கிளாரா கி.பி. 1212ம் ஆண்டின் தவக்கால மறையுரையைப் புனித பிரான்சிஸ் அசிசியார் வழங்கியதைக் கேட்டு, அங்கேயே ஆலயத்தில் தான் கிறிஸ்தவ ஏழ்மையைப் பின்பற்ற உறுதி பூண்டுள்ளதாக அசிசியாரிடம் தெரிவித்தார். அவருடைய அறிவுரைப்படி குருத்து ஞாயிறன்று இரவு நேரத்தில் புனித கிளாராவின் உறவினர் பியான்காவோடும், தோழியோடும் அரண்மனையை விட்டு வெளியேறினார். காட்டுப்பகுதிக்குச் சென்றபோது அசிசியாரும் அவரது தோழர்களும் தீப்பந்தங்களோடு எதிர்கொண்டு சென்று வரவேற்று அருகிலிருந்த ஆசிர்வாதப்பர் சபை மடத்தில் கொண்டு சேர்த்தனர்.

சபையில் சேர்ந்த அன்றே தனது ஆடம்பர ஆடைகளைக் களைந்து, தவ ஆடைகளை அணிந்து, தலையை மொட்டையடித்துக் கொண்டார். இவரது தந்தை இவருக்குத் திருமணம் முடிக்க நினைத்து சென்று அழைத்தபோது பெரும் அதிர்ச்சி. காரணம் பீடத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தனது மொட்டைத் தலையைக் காண்பித்தார். தந்தை ஏமாற்றத்தோடு திரும்பினார். புதிய சபை பல ஐரோப்பிய நாடுகளில் மிக விரைவாகப் பரவியது. ஏழைப்பெண்களின் முன்னேற்றம்தான் இச்சபையின் நோக்கம். அசிசியாரின் சபையைப்போன்று ஏழ்மையைப் பின்பற்றி வாழ்வதே ஒழுங்கு என கடைப்பிடித்தது இச்சபை. கிளாராவின் கடும் தவ துறவற வாழ்வைப்பார்த்து அவரது தாய் தங்கைகளும் கூட இச்சபையில் சேர்ந்து விட்டனர். அது மட்டுமன்று இவரது இறைப்பணி

வாழ்வைப் பார்த்து திருத்தந்தையர்களும், கர்தினால்களும் ஆயர்களும் இவரது வழிகாட்டுதலைத் தேடி வந்தனர்.

தொடர் உண்ணா நோன்பு, புலாலின்மை, மௌனம், இரவு விழிப்பு செபம், காலணியின்றி நடப்பது போன்ற கடும் தவ வழியில் இறைவனிடம் தங்களை அர்ப்பணித்து வாழ்ந்தனர். கடும் தவத்தைச் சற்று தளர்த்தலாம் என திருத்தந்தையர்கள் கேட்டபோது, தனது அன்பால் அதனை முறியடித்தார். இவ்வளவு தவ முயற்சிகளுக்கு நடுவிலும் இவர் மனமகிழ்ச்சியோடு இருந்ததைப்பார்த்து அனைவரும் வியந்தனர். தனது 59வது வயதில் மூன்று கன்னியர்கள் யோவான் எழுதிய ஆண்டவரின் திருப்பாடுகளைப் படிப்பதைக் கேட்டுக்கொண்டே ஆகஸ்டு 12, 1253ல் இறைவனடி சேர்ந்தார். நற்கருணைமீது ஆழ்ந்த பக்தி கொண்டதால் இவரது திருவுருவப்படம் நற்கருணைப் பாத்திரம் ஏந்தியிருப்பதைப் போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது ஒரு தனிச்சிறப்பு. நாமும் இவரைப்போல வாழ உறுதியெடுப்போம், ஒறுத்தல்கள், தவ முயற்சிகள் ஏற்று இறைவனில் சங்கமிக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, புனித கிளாரா திருச்சபைமீது மிகுந்தப் பற்றுக்கொண்டு வாழ்ந்தார். இம்முன்மாதிரியைப் பின்பற்றி எம் திருஅவைத் தலைவர்கள் வாழ்ந்து மக்கள் அனைவரையும் அவ்வழியே அழைத்துச்சென்று, இறையரசைக் கட்டியெழுப்ப வேண்டிய வரங்களைப்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. உணவாக வந்த தெய்வமே, நாங்கள் உண்ணும் உணவு எங்கள் உடலுக்குப் பலம்தரும். ஆனால் ஆன்மீக உணவான நற்கருணை எங்களுக்கு ஆற்றலையும் வல்லமையும் தந்து உண்மையை நோக்கி வழி நடத்தும். புனித கிளாராவைப்போன்று மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து வாழ வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. நானே வழி என்றவரே, உண்மை வழி எதுவென்று அறியாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களையும் உமது இரக்கத்தால் அரவணைத்த புனிதரைப்போன்று உமது வழியை தேர்ந்தெடுத்து அதன்படி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 13.08.2017 ஆண்டின் பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. அர. 19:9அ.11-13அ II. உரோ 9: 1-5 நற்செய்தி மத் 14:22-33

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, இன்று பொதுக்காலம் 19ஆம் ஞாயிற்றைச் சிறப்பிக்கின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் எரேமியா இறைவனின் பிரசன்னத்தை மெல்லிய தென்றல் வழியாக

உணர்ந்துக்கொள்ள இறைவன் அழைக்கின்றார். இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் உண்மை இறைவனின் பிரசன்னத்தை யூதர்களும், பிறஇன மக்களும் உணர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள, மீட்பைப் பெற்றுக் கொள்ள நான் கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்குள்ளாகக் கூட விரும்பியிருப்பேன் என்று கிறிஸ்துவில் இறை பிரசன்னத்தை உணர்த்த முயல்கிறார். நற்செய்தி வாசகத்தில் இறைமகன் இயேசுதான் கடவுள் என்பதை தனது சீடர்கள் உணர்ந்துக் கொள்ளவும், இறைவனின் பிரசன்னம் நம்மோடு எப்போதும் உள்ளது என்பதை அவர்கள் புரிந்துக் கொள்ளவும், கடலின்மீது நடந்து வருகிறார். நாம் ஏழையாக இருந்தாலும், வசதி படைத்தவர்களாக இருந்தாலும், நோய் நொடிகளோடு மருத்துவமனையில் இருந்தாலும், தீராத கடன் தொல்லைகளோடு குடும்பங்களில் இருந்தாலும், அவரை விட்டு விலகி இருந்தாலும் இறைவன் நம்மை அணுகி வருகின்றார், நம்மைத் தேடி வருகின்றார், நம்மையும் தன்னுடன் பயணம் செய்ய அழைக்கின்றார்.

நாம் அவரின் குரலுக்குச் செவிகொடுக்கின்றோமா? உலக துன்பங்களாகிய அலைகளைக் கண்டு பயந்து துன்பத்தில் மூழ்கி விடுகின்றோமா? உலகச் சிந்தனைகளை ஒதுக்குவோம், இறைச் சிந்தனையில் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்கள் ஆண்டவரின் உருமாற்றத்தின்போது சீடர்கள் பெற்ற அனுபவத்தைப் பெற தங்கள் பணிகளில் முழு விசுவாசத்தைப் பொழிந்து வழிநடத்திச் செல்ல அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

2. உறவின் ஊற்றே இறைவா, கிறிஸ்துவ விசுவாசிகள் என கூறிக்கொள்ளும் நாங்கள் பல நேரங்களில் உம்மை மறந்தவர்களாக, மறுதலித்தவர்களாக, நம்பிக்கைக் குறைந்தவர்களாக வாழும் அவல வாழ்வை விட்டுவிட்டு உறுதியான விசுவாசம்கொண்டு, அதற்குத் தடையாக வரும் சோதனைகளை எதிர்க்கொண்டு, உயர்வு தாழ்வு பாராமல் மனிதர்களை மதித்து வாழவும், நல்ல ஆயனாக, தலைவனாக, தலைவியாக குடும்பத்திலும், சமுதாயத்திலும், திருச்சபையிலும் சிறந்தவர்களாக தழைத்தோங்கிடவும் உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் ஊற்றே இறைவா, உலகில் உள்ள ஏழை எளியோர், திக்கற்றோர், மாற்றுத்திறனாளிகள், பார்வையற்றோர், விதவைகள் மற்றுமுள்ள அனைவரையும் ஆசீர்வதித்தருளும், உமது பிரசன்னம் கடலில் தவித்த சீடர்களின் பயத்தைப் போக்கியது போல இவர்களுக்கும்

தங்களின் நிலையால் வரும் பயத்தை உமது பிரசன்னத்தால் போக்கி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

4. மக்களுக்காகத்தான் தலைவர்கள், தலைவர்களுக்காக மக்கள் அல்ல, என்ற அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்கும் நல்ல தலைவர்களாக அமைந்திட, நாட்டு வளமைகளை நன்முறையில் பயன்படுத்தி மக்களும் நாடும் அனைத்து உயிரினங்களும் பாதுகாக்கப்பட்டு, நாடு செழிக்க, பகை, போர், தீவிரவாதம், கொலை, கொள்ளை இவைகள் ஒழிந்து மக்கள் அமைதியில்வாழும்சூழலைஏற்படுத்திநன்றியுள்ளவர்களாகவிளங்கிட உம் தயவை நிறைவாய்ப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 15.08.2017 தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. தி.வெ.11:19அ, 12:1-6அ.10அஆ II. 1கொரி.15:20-26 லூக் 1: 39-56

**“யாரிவள் வைகறைப்போல் தோற்றம், திங்கள்போல் அழகு, ஞாயிறுபோல் ஒளி” (இ.பா 6: 10)**

இயேசுவின் உயிர்ப்பிற்குப் பிறகு கன்னிமரியா, இவ்வுலகில் வாழ்ந்தபின் உடலோடும், ஆன்மாவோடும் தம் திருமகன் கிறிஸ்துவால் வானத் தூதர்களின் ஆர்ப்பரிப்போடு விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதை நமது தாயாம் திருச்சபை கடன் திருவிழாவாகக் கொண்டாடுகின்றது. இப்பெருவிழாவைப் பாரம்பரியமாகக் கீழ்த்திருச்சபையில் நான்காம் நூற்றாண்டிலிருந்தே அன்னை ஆண்டவரில் ஆனந்தம் கொள்கிறார் (டார்மிஷன்) எனச்சிறப்பித்துக் கொண்டாடி வந்தனர். இயேசு விண்ணகத்திற்குச் சென்றார். மரியா விண்ணகத்திற்கு வரவேற்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டார். பழைய ஏற்பாட்டில் ஏனோக்-365 ஆண்டுகள் வாழ்ந்து நடந்துகொண்டிருந்தபோது இறைவன் அவரை எடுத்துக் கொண்டார் (தொநூ. 5:23,24). யோர்தான் நதிக்கரையில் இறைவாக்கினர் “எலியா” எலிசாவோடு நடந்து கொண்டிருந்தபோது விண்ணிலிருந்து வந்த நெருப்புத்தேரும், நெருப்பு குதிரைகளும் அவரை மேலே எடுத்துக் கொண்டன (2அர 2:11).

விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நம் அன்னை மீட்பின் திட்டத்தில் துணை இரட்சகியாக இருந்து நம் ஆன்மாவின் விடுதலைக்கு வழிகோலினார். நம் தாய் நாடானது 70ம் ஆண்டு சுதந்திர தினவிழாவைக் கொண்டாடுகின்ற இந்நன்னாளில் நாம் நமக்குள்ளே இனம், மதம், பாகுபாடின்றி வேற்றுமைகளைக் களைந்து அன்பு, உண்மை, நீதி, நேர்மை, தியாகம், பரிவிரக்கம் எனும் அன்னையின் பண்புகளின் மாதிரியாக வாழ்வோம் என உறுதிமொழி எடுத்து பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. அரும்பெரும் செயல்புரிந்த வல்லவராம் கடவுளே, திருச்சபையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் பொதுநிலையினர் அனைவரும் உமது இறையாட்சிப் பண்புகளான அன்பு, உண்மை, நீதி, தியாகம், பரிவிரக்கம் ஆகியவைகளின்படி வாழ்ந்து, உலகிற்கு ஒளிவிடும் மக்களாகத் திகழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தாயும் தந்தையுமான இறைவா, மரியாவின் பண்புகளைத் தமதாக்கி, பிறரை, சிறப்பாக நலிந்தோரை வாழவைத்து இந்த நானிலத்தையே இறையாட்சியாக வளர்த்தெடுக்க நம்மை நாம் ஈடுபடுத்துவதுதான் மரியாவுக்குச் செய்யும் மிகப்பெரும் சிறப்பும் பெருமையும் என உணர்ந்து இயேசுவின் அன்பைப் பொழியும் பிள்ளைகளாகவும், அன்னைமரியிடம் செபிக்கும் பிள்ளைகளாகவும் வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, எம் பங்கிலுள்ள அனைத்து பக்தசபை உறுப்பினர்களையும் உம்பாதம் அர்ப்பணிக்கின்றோம். அன்னை மரியாள் நமக்காகப் பரிந்துபேசி செபிப்பதுபோல நாங்களும் மற்றவர்களுக்காகப் பரிந்துபேசி செபிக்கும் பண்பை வளர்த்துக் கொள்ள அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 15.08.2017 சுதந்திர தினவிழா பள்ளி வழிபாடு

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

### தயாரிக்க வேண்டியவைகள்

(ஊழல், பணமய அரசியல், மத வன்முறை, மனிதநேயமற்ற மருத்துவம், அடக்குமுறை, பெண்ணடிமை, விலைவாசி உயர்வு, பதவிமோகம்)

(பாரதத் தாயின் கைகளில் வன்முறை செயல்கள் பட்டியலும் சங்கிலியும் (வரைப்படம்)

பாரத மாதாவின் கைகளில் சங்கிலியும் வன்முறை செயல்கள் (அல்லது)

இந்திய படம் ஒட்டலாம்

**தலைவர்:** தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே... அன்பு மாணவ மாணவிகளே, இன்று நம்முடைய தாயகத்தின் சுதந்திர தினவிழாவைச் சிறப்பிக்கும் நாம் இறைவன் நமக்கு தந்திருக்கும் எண்ணில்லாத அருட்கொடைகளுக்கு நன்றி சொல்வதோடு இன்றைய காலகட்டத்தில் நம் பாரத தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலை, சோதனை, தேசத்தை அச்சுறுத்தும் வன்முறை இவைகள் அனைத்தையும் இறைவன் தன்னுடைய வல்லமையாலும் கனிவிரக்கத்தாலும் நம் நாட்டிற்கு வேண்டிய அமைதி, நீதி, சமாதானம், சமத்துவம், மகிழ்ச்சி போன்றவைகளைத் தருமாறு முழுமனதுடன் இறைஞ்சி மன்றாடுவோம். நாம் அனைவரும் பக்தியோடு இப்பாடலைப்பாடி இறைவனை நம் மத்தியில் அழைப்போம்.

**பாடல்:** சரித்திர நாயகனே, சர்வத்தையும் ஆள்பவனே...(அல்லது) பொறுத்தமான பாடல்

**தலைவர்:** அன்பு மாணவ மாணவிகளே, நற்செய்தி வாசகத்தின் வழியாக இறைவன் தாம் படைத்த மனிதர்கள்மேல் எத்துனை அன்பும், இரக்கமும் வைத்துள்ளார் என்பதைக் கேட்டறிவோம்.

**இறைவார்த்தை:** விப. 3:7-12

**முதல்வர்:** நாம் இப்போது வாசிக்கக் கேட்ட இறைவார்த்தை நமக்கு இறைவன்மீது நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தருகிறது. இறைவனின் கருணை உள்ளம் தெரிகிறது. நாம் கண்ணீரோடு, வாஞ்சையோடு கேட்பவைகளையெல்லாம் இறைவன் மறுக்காமல் தருகிறார் என்பதை உணர்ந்த நாம் இப்போது நம்முடைய வேண்டுதல்களை இறைவனின் பதம் சமர்ப்பிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நீதியின் வேந்தனே இறைவா, எம் நாட்டில் பொருளாதார, அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியோடு உண்மை மற்றும் மனித மாண்பினையும் நாங்கள் வளர்த்திடவும், அதற்காக உழைத்திடவும் வேண்டிய அருளைப்பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. சமத்துவத்தின் நாயகனே இறைவா, சாதி, மதம், இனம் என்ற பாகுபாடுகளைக் களைந்து, இந்தியக் குடிமக்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற உணர்விலே வளரவும், தேசிய ஒருமைப்பாடு, சமாதானம் போன்ற விழுமியங்கள் நிலைநாட்டப்படவும், நீதிமிகு சமுதாயத்தை உருவாக்கவும் அருள்தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. நலன்களின் நாயகனே இறைவா, எங்கள் நாட்டிலுள்ள ஏழை மக்களின் உழைப்பை பல்வேறு வழிகளில் சுரண்டும் அரசியல்வாதிகள் மனம்மாறி, மக்களை நல்முறையில் வழிநடத்தத் தேவையான சிறந்த தலைமைத்துவத்தையும், ஆக்கப்பூர்வமான முற்போக்குச் சிந்தனைகளையும் கொண்டு செயல்பட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் ஊற்றே இறைவா, எம் நாட்டின் விடுதலைக்காக உயிர்நீத்த விடுதலைப் போராட்ட வீரர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும், குடும்ப நலத்திற்காகவும் மன்றாடுகிறோம். எம் நாட்டைப் பாதுகாத்து வரும் இராணுவத்தினரையும் அவர்களின் குடும்பங்களையும் நீர்தாமே பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**முதல்வர்:** எல்லாம் வல்ல இறைவனிடம் நம்முடைய வேண்டுதல்களைச் சமர்ப்பித்த நாம் இறைவன் நம் செபத்தைக் கேட்கின்றார் என்ற நம்பிக்கையுடன் அனைவரும் சேர்ந்து இயேசு கற்றுக்கொடுத்தச் செபத்தை வானகத் தந்தையை நோக்கி மன்றாடுவோம்.

**பரலோகத்தில் இருக்கிற...**

**அருள் நிறைந்த மரியே...**

**செபம்:** இறைவா, நாங்கள் நாட்டிலும், வீட்டிலும் என்றும் உமது பிரசன்னத்தில் நிலைத்திருக்கவும், நல்ல இறைமக்களாய் குடிமக்களாய் வாழவும் வரமருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**பாடல்:** என்னை உமது கருவியாய்...

## 20.08.2017 ஆண்டின் பொதுக்காலம் 20ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணி சம்பந்தன்

I. எசா 56: 1.6-7 II. உரோ 11:13-15,29-32 நற்செய்தி மத் 15: 21-28

இறையேசுவில் அன்புகொண்ட இனிய அன்பர்களே, "எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலைவேண்டும்" என்ற கூற்றின்படி அனைவருக்கும் ஆண்டவர் அருள்புரிகிறார். அவரின் ஊழியர்கள், அவரின் உடன்படிக்கையைப் புரிந்துக்கொள்ளாமல் வாழும் பிற இன மக்களின் தேவைகளைக் குறித்தும் ஆண்டவர் கவனமாய் இருக்கின்றார் என்பது இன்றைய வாசகங்களின் வாயிலாக தெளிவாகின்றது.

இறைவனின்மீது நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் நம் வாழ்வில் இருக்கும்போது நமது இறைவேண்டல் எந்நிலையிலிருந்தாலும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. நாம் எந்நிலையில் இருக்கின்றோம் என்பதை இறைவன் பார்ப்பதில்லை, எந்த மனநிலையில் இறைவனை வேண்டுகின்றோம் என்பதையே அவர் பார்க்கின்றார். நாம் பாவியாகவோ, தீண்டத்தகாதவர்களாகவோ, தீராத நோயாளிகளாகவோ, பிற இனத்தைச் சார்ந்தவர்களாகவோ, பிறமதத்தைச் சார்ந்தவர்களாகவோ இருப்பினும் இறைவன் தன் பரந்த உள்ளத்தால் விரிந்தக் கரங்களோடு நம்மை வாரி அணைக்க நமது வருகைக்காகக் காத்திருக்கின்றார். நமது நிலையைச் சிந்திக்காமல் இறைவனின் அளப்பரிய அன்பை மட்டுமே மனதில் கொண்டு அவரை நாடுவோம். நமது உள்ளத்தைத் திறந்து நமது வேண்டுதல்களை அவர்பாதம் இறக்கி வைத்து அவரில் இணைந்து செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பே உருவான தந்தையே, தாய்த் திருச்சபையை வழிநடத்தி வரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் இறைவனின் மீட்பு அனைவருக்கும் உரியது என்ற மனநிலையில் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் பணிபுரியும் நல்ல மனதினைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றொம்.

2. இரக்கத்தின் இறைவா, கீழ்ப்படிதலில் நாம் இரக்கத்தைப் பெறுகிறோம் என்ற புனித பவுலின் வரிகளின்படி எங்கள் குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் மனதில் பெரியவர்களின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் மனதைத் தந்து உமதருளால் நிரப்பிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, சகலவித துன்பங்களாலும் துன்புறும் மக்களாகிய எம்மை காத்து வழிநடத்தி ஆண்டவரை நம்பும் ஒருவரும் வீண்போவதில்லை என்றும், அவர்மேல் உள்ள நம்பிக்கை நம்மைக் காப்பாற்றும் என்ற மன உறுதியைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாப்பளிக்கும் இறைவா, இக்காலச் சூழலில் உணவுகளின் மாற்றத்தால் பரவி வரும் நோய்களிலிருந்து எங்களைக் காப்பாற்றியருளும். செயற்கை உணவுகளைத் தவிர்த்து, நீர் எங்களுக்குத் தந்துள்ள இயற்கை உணவுகளைக் கையாளும் விழிப்புணர்வை எங்களுக்குள் மலரச் செய்யவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.08.2017 அரசியான தூய கன்னிமரியாள் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று தாய்த் திருச்சபையானது அரசியான தூய கன்னிமரியாள் விண்ணக மண்ணக அரசியாக மணிமுடி சூட்டப்பட்ட நாளைக் கொண்டாட இத்திருப்பலியின் வழியாக அழைப்பு விடுக்கிறது. அகில உலகத் திருச்சபையானது 1954ம் ஆண்டு அன்னை மரியாளின் ஆண்டைக் கொண்டாடி வந்த வேளையில் திருத்தந்தை 12ம் பத்திநாதர் அக்டோபர் 11ம் நாளன்று தமது சுற்று மடலில் "அரசியான தூய கன்னி மரியா" விழாவை அறிமுகப்படுத்தினார். மரியாள் அரசி என்பதைப் பலர் தங்களுடைய எழுத்துகளிலும் பதிவு செய்துள்ளனர்.

விண்ணக மகிமையிலே உருவான கன்னிமைக் குன்றா அரசியே என்று புனித எப்ரேமும், "பூவுலகை ஆளும் அரசரை ஈன்ற அன்னையே என்றும் புனித கிரகோரி ஒசியான்சனும், க்ரேத்தே நகர் புனித ஆன்ட்ரூ மனுக்குலத்தின் அரசியே" என்றும் அன்னையின் பெருமையை எடுத்துரைத்துள்ளனர். எனவே நாமும் நமது குடும்பங்களில் அன்னை மரியாளை அரசியாக ஏற்று அவர் நடத்துகின்ற வழியிலே சென்று, இறையரசை கட்டியெழுப்ப வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம் இறையருளைப் பெறுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. "ஆண்டவரின் வலப்பக்கம் வீற்றிருக்கும் அழகின் முழுமையே, அற்புத அரசியே, எங்களின் தாயே, இதோ இந்நன்னாளில் எமது திருச்சபையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். திருச்சபைக்காகப் பணியாற்றும் திருத்தந்தை, ஆயர்கள், திருப்பணியாளர்கள், கன்னியர்கள் ஆகியோரை நிறைவாக ஆசீர்வதித்து அவர்களது பணிசிறக்க வேண்டுமென விண்ணக மண்ணக அரசியான தூய கன்னி மரியாள் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் ஊற்றே எம் இறைவா, குழந்தைகளைப் பேணிக்காத்து, வளர்க்கும் அனைத்து தாய்மார்களுக்காக உம்மிடம் மன்றாடுகிறோம். உமது அன்னை எவ்வாறு உம்மைப் பேணிக்காத்து இடைவிடாமல் பராமரித்து இறுதிவரை உம்மோடு பயணித்தாரோ, அதேப் போல் இவர்களும் தங்களுடைய பிள்ளைகளின் வாழ்வில் துணையாக நிற்க வேண்டுமென இரக்கத்தின் அரசியான தூய கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. பேரன்பின் திருவுருவே எம் இறைவா, இவ்வுலகில் நிலவும், உணவு பற்றாக்குறை, விலைவாசி உயர்வு, கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்ற அசம்பாவிதமான காரியங்களை உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். உமது அன்னை எவ்வாறு சிலுவைப் பயணத்தில் உம்மோடிருந்து உமக்கு உதவினாரோ அதேப்போல் எங்களது வாழ்விலும் உமது அளவில்லா அன்பையும், பராமரிப்பையும், பாதுகாப்பையும் அளித்தருள வேண்டுமென்று குடும்பங்களின் அரசியான தூய கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
4. கரம் பிடித்து வழிநடத்தும் இறைவா, வாழ்வில் பல நேரங்களில் வழிதவறி நடக்கும் இளைஞர் இளம் பெண்களுக்காக உம்மிடம் மன்றாடுகிறோம். இவர்களது வாழ்வில் அன்னையின் பராமரிப்பும், பரிந்துரையும் கிடைத்து நன்னெறியில் வளர்ந்து திருச்சபைக்குச் சான்று பகரக்கூடிய பிள்ளைகளாக வளர, வழிநடத்தும் அரசியான தூய கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 24.08.2017 தூய பர்த்தலமேயு திருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

பர்த்தலமேயு என்றால் "இறைவனின் கொடை" எனப் பொருள்படும். இவர் தாவீது மகன் அப்சலோம் வழி வந்தவர். இவரது இயற்பெயர் நத்தனியேல். கலிலேயாவுக்குச் செல்லவிரும்பி இயேசு பிலிப்பை அழைத்தார். உடனே விரைந்துச் சென்று தான் பெற்ற ஆனந்த அனுபவத்தை நத்தனியேலிடம் இறைவாக்கினர்களும், மோசேயும் குறிப்பிட்டிருப்பவரைத் தான் பார்த்தாகவும், அவர் நாசரேத்து யோசேப்பின் மகன் இயேசு என்றும் மொழிந்தார். பிலிப்பு விடுத்த அழைப்பை ஏற்றுச் சென்று இயேசுவைச் சந்தித்தார். "உண்மையான இஸ்ரயேல் கபடற்றவர்" என்று இயேசுவால் புகழப் பெற்றார்.

திருத்தூதர்கள் எங்கு பணியாற்றச் செல்வது என்று சீட்டு குலுக்கிப்போட்டபோது மத்திய இந்தியாவுக்குச் செல்ல பர்த்தலமேயுவுக்கு சீட்டு விழுந்ததாக அரிஜன் குறிப்பிடுகிறார். இந்தியாவில் கல்யாண் பகுதிக்கு வந்து நற்செய்தி போதித்தார். அங்கிருந்து அர்மேனியா நாட்டிற்குச் சென்று நற்செய்தி போதித்தார். நோயுற்றவர்களைக் குணப்படுத்தினார். இறைவனின் அன்பை வெளிப்படுத்தினார். இவரது வாழ்வு-மரணம் பற்றி "பர்த்தலமேயுவின் பாடுகள்" என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாலிமியஸ் என்னும் அரசர் திருத்தூதர்மீது பற்றுக்கொண்டார் மக்களின் குறைகளை இறைவனின் துணையுடன் நீக்கி, மக்களைக் காக்கும் அவரை போற்றினார். திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவரானார். இதை ஏற்றுக்கொள்ள முடியாத பக்கத்து நாட்டு அரசன் ஏஸ்ட்ரிகஸ் மனம் பதைத்தான். தனது நாட்டிற்குப் போதிக்க வரும்படி வஞ்சகமாய் அழைத்தான். நம்பிச்சென்ற திருத்தூதர் பர்த்தலமேயுவை கி.பி. 68ம் ஆண்டு கைது செய்து சிறையில் அடைத்தான். உயிருடன் தோலை உரித்துப் பின் தலைகீழாக நிறுத்தி, தலையை வெட்டிக்கொலை செய்தான். நாம் கடபற்றவர்களாக உண்மையுடன் வாழும்போது நம்மையும் இயேசு புகழ்வார் என்பதை மனதில் கொண்டு இத்திருப்பலியில் பங்கேற்று பயன் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் அன்பிலும், அமைதியிலும், ஒற்றுமையோடும் தங்களின் அழைத்தலின் மேன்மையுணர்ந்து மகிழ்வுடனும், ஆர்வத்துடனும், எந்தத் துன்பம் வந்தாலும் இயேசுவில் நிலைத்து நிற்கும் தியாக உள்ளத்துடனும் புனித பர்த்தலமேயு போன்று வாழ வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. வெற்றியின் தந்தையே இறைவா, துன்பத்தைக்கண்டு துவண்டுவிடாது, துணிவோடு வாழ்வில் சந்திக்கும் தீமைகளையும் சோதனைகளையும் எதிர்க்கொள்ளும் சவால்களையும் தூய பர்த்தலமேயு போல் வென்று வாழ வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, எம் பிள்ளைகள் வழிதவறி செல்லாது, இறைச்சித்தத்தை உணர்ந்து அதன்படி நல்ல இறைபக்தி, ஞானம் நிறைந்த பிள்ளைகளாக வாழ தூய பர்த்தலமேயுவைப் பின்பற்றி வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அமைதியின் இருப்பிடமே இறைவா, உமது வாழ்வளிக்கும் வார்த்தையால் பகைமையை மறந்து பாவ உறவில் பயணம் தொடரவும், செல்லும் இடமெல்லாம் நீர் காட்டிய அன்புவழியைப்ளுளுளு பின்பற்றி அழிவுப் பாதையை மாற்றி ஆக்கப்பணியில் செயல்பட எம் ஒவ்வொருவருக்கும் உமதருளை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 27.08.2017 ஆண்டின் பொதுக்காலம் 21ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** **திரு. ஜான் சுரேஷ்**

மனமாற்றத்தின் மூலம் சுகம் உண்டென எத்தனைப்பேர் சொன்னாலும், தன்னிலை மாற்றத்தின் மூலமே யாரும் அதை அனுபவிக்க முடியும். இன்று தாய்த் திருச்சபையானது தூய அகுஸ்தினாருடைய விழாவினைக் கொண்டாடுகிறது. குழந்தைப் பருவத்திலேயே அகுஸ்தீன் நல்ல ஞானத்துடனும், இளமைப்பருவத்திலேயே அபார அறிவுத்திறனுடனும் விளங்கினார். ஆனால் கடவுளை நாடாது உலக வாழ்க்கை வாழ்ந்தார். இவர் பல பிரிவினரைப்பற்றி அறிந்து தனது 40வது வயதில் கிறிஸ்துவத்தை முழுமையாக ஏற்றார்.

இவரது ஞானம் கத்தோலிக்கத் திருச்சபைக்குப் பெரும் உதவியாக இருந்தது. இவர் வாழ்ந்த காலத்தில் உருவான பல தப்பறைகளை எதிர்த்து, அவற்றிற்கு விளக்கமும் எழுதி திருச்சபையின் இறையியலாராக விளங்கினார். இவர் கி.பி. 430ம் ஆண்டு தனது 76ம் வயதில் இறைவனடி சேர்ந்தார். தந்தையின் உதவியின்றி தாயின் உதவியோடு வாழ்ந்து நம் தாய் திருச்சபைக்குப் பாடம் புகட்டிய தூய அகுஸ்தின் நமக்கு ஒரு பாடமாக இருக்கிறார். நாமும் நமது முழு ஒத்துழைப்போடு திருச்சபைக்கு உதவும் மக்களாக வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம், இறையருள் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, திருச்சபையை வழிநடத்தி வரும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், அனைவரையும் ஆசிர்வதித்து தூய அகுஸ்தினின் இறைச் சிந்தனையில் இவர்கள் ஒவ்வொருவரும் வாழ்ந்து திருச்சபையைச் சீரிய முறையில் வழிநடத்த வேண்டுமென்று தூய அகுஸ்தினார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வும் வழியுமான இறைவா, தூய அகுஸ்தினார் தனது அறிவுக் கூர்மையைத் திருச்சபையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி, அதில் மாற்றங்களை ஏற்படுத்தினார். எங்களின் இளையோர்களும் தங்களிடமுள்ள ஆக்க சக்திகளைப் பிறரின் நலனுக்காகப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காண அருள்பொழியுமாறு தூய அகுஸ்தினார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. உள்ளத்தை அறியும் இறைவா, இங்குக் கூடியிருக்கும் அனைவருக்காகவும் வேண்டுகிறோம். நீர்தாமே எம் உள்ளத்தில் இருக்கும் கருத்துகளை அறிந்து உமது அருளால் எங்களின் தேவைகளை நிறைவுச் செய்ய வேண்டுமென்று தூய அகுஸ்தினார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 28.08.2017 தூய அகுஸ்தினார் திருப்பலி

**முன்னுரை** **திரு. ஜீசஸ் மகுட மன்னன்**

I. எசா. 22:19-23 II. உரோ 11:33-36 மத் 16: 13-20

இயேசுவின் அன்புள்ள சகோதரமே, இன்று நம் தாயாம் திருச்சபை ஆண்டின் 21ஆம் ஞாயிறு வழிபாட்டைச் சிறப்பிக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் தெபுனாவை பதவியிலிருந்து இறக்கி விடுவேன் என்று கூறும் இறைவன், எலியாக்கிமை இஸ்ரயேல் மக்களுக்குத் தலைவனாக அமர்த்துவேன் என்று கூறுகிறார். இரண்டாம் வாசகத்தில் ஆண்டவரின் வழிகளை நம்மால் அறிந்துக் கொள்ளமுடியாது. நமது சிந்தனைகள் வேறு, கடவுளின் சிந்தனைகள் வேறு. அவரின் தீர்ப்புகள் நம் அறிவுக்கு எட்டாதவை என்று தூய பவுல் கூறுகிறார். நற்செய்தி வாசகத்தில் இறைமகன் இயேசு தனக்குப் பின் இந்த திருச்சபையை வழிநடத்தும் அதிகாரத்தை பேதுருவுக்குக் கொடுக்கின்றார். தலைமைத்துவம் என்பது நம் ஒருவருக்கேச் சொந்தம் அதை நம்மிடமிருந்து யாராலும் எடுத்துவிட முடியாது என்று எண்ணுவது மிகவும் தவறு.

படித்த மேதை என்று தன்னைக் கூறிக்கொண்ட சீடரை ஆண்டவர் தேர்ந்தெடுக்கவில்லை, நல்ல வசதியாக மக்களிடம் வரிதண்டி வாழ்ந்த சீடரையும் தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக, படிப்பறிவில்லாத, முன் கோபம் கொண்ட, மீன்பிடிக்கும் தொழிலைச் செய்யும் ஒரு சாதாரண ஆனால் உள்ளத்தில் எந்த இரகசியமும் இல்லாத, திறந்த மனதுடன் வெளிப்படையாகப் பேசும் ஒரு மனிதனை இறைவன் தலைவனாக தேர்ந்தெடுக்கிறார். நமது வாழ்வில் உயர்ந்த நிலைக்கு வர நாம் எப்படியெல்லாம் குறுக்கு வழியைத் தேடுகிறோம்? இறைவன் நம்மை எப்படி வழிநடத்துகிறாரோ அவ்வழியில் உண்மை, நீதி, நேர்மையோடு பயணம் செய்யும் நல்ல மனதைத் தரவேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, உமது திருவுளத்தை நிறைவேற்ற உம்மால் அழைக்கப்பட்ட எம் திருத்தந்தை பிரான்சீஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரையும் இறைவாக்குக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்து உறுதியுடனும், மனத்திடத்துடனும் உம் சாட்சிகளாக வாழ்வதற்கான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மாறாத இறை செல்வமே இறைவா, உமது அருட்செல்வம் மிகுதியானது. ஞானம், அறிவு ஆழமானது, தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை, செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை என்பதை உய்த்துணர்ந்து, உமது சித்தமே என் பாக்கியம் என வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

வாழும் கடவுளின் மகனே இறைவா, உமது நற்செய்தியைப் பறைச்சாற்றவும், மக்களைத்தீயச்சக்திகளிடமிருந்துவிடுவிக்கவும்,நல்லஉடல்நலமளிக்கவும், எளிமையாக வாழ்ந்து வார்த்தைகளில் இனிமைக் கலந்து அன்புடன் நடந்து சாட்சி பகரவும் மெசியாவாகிய நீரே என்னைத் தேர்ந்துக்கொண்டீர் என உணர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.08.2017 திருமுழுக்கு யோவானின் பாடுகள் திருப்பலி

**முன்னுரை** **திருமதி. டிலைலா சேவியர்**

**என் வாய் உமது நீதியையும், மீட்பையும் எடுத்துரைக்கும் (தி.ப. 71:15)**

மெசியாவின் வருகையை சீராக்க அவரின் பாதையை பண்படுத்த வந்த இறைத்தூதர் இவர். பழைய ஏற்பாட்டில் உண்மைக்கு உயிர் கொடுத்தார்கள் இறைவாக்கினர் பலர். அவ்வாறே பழைய புதிய ஏற்பாடுகளை இணைக்கத் தோன்றிய இறைவாக்கினர் யோவானும் உண்மைக்கும் நீதிக்கும் சாட்சி பகர்ந்து உயிர் நீத்தார். "நெருப்பினாலும் தூய ஆவியினாலும் மட்டுமே திருமுழுக்குத் தர வருபவரின் முன்னோடி நான்" என்றார். நம்பிக்கையில் திளைக்கவும், அதில் நிலை நிற்கவும் விரும்பிய யாவரும் யோவானைப் பின் தொடர்ந்தனர். "வரவிருப்பவர்" உங்கள் நடுவில் இருக்கிறார் என்று ஐயமின்றி எடுத்துரைத்தார். எனவே இவரிடம் செருக்கு சிறிதுமின்றி பாவம் போக்கும் செம்மறி வந்ததை உணர்ந்தவுடன் தம் சீடர்களிடம் "இதோ இறைவனின் செம்மறி" என்று சொல்லி அவர்களை இயேசுவிடம் அனுப்பிவிட்டு முற்றிலும் மறைந்து வாழ்ந்தார். இத்தகைய சான்றோரான யோவான் தம் உயிரைத் தியாகம் செய்யக்கூடிய சூழ்நிலை எப்படி வந்தது?

திருமுழுக்கு யோவான் குற்றவாளியைக் குற்றவாளி என்று சொல்லத் தயங்கவில்லை. உண்மையைக் கூரைமீதிருந்து, அறிவிக்கவும் அஞ்சவில்லை. யோவானை மக்கள் கூட்டம் நெருங்குவதைக்கண்டு அஞ்சிய ஏரோது, தூயவரைச் சிறையில் அடைத்தான், துன்புறுத்தினான். தன் குற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாத அரசியின் வஞ்சம் தீர்க்கும் எண்ணம், கண்ணியம் என்று நினைத்துக்கொண்டு போதையில் ஏரோது தந்த வாக்கு இவையெல்லாம் ஒன்றாக சேர்ந்து திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டக் காரணமாயின. உண்மையை மூடி மறைக்கவும் தன் உயிரைக் காத்துக் கொள்ளவும் வரவில்லை. உயிரே பறிக்கப்படினும், எந்நாளும் உண்மையே வெல்லும் என்பதை யோவான் தான் அனுபவித்தப் பாடுகளின் வழியாக வாழ்ந்து சாட்சியம் பகர்ந்து உயிர் நீத்தார். உடலைக் கொள்ளும் மனிதருக்கு அஞ்சாமல், ஆன்மாவைக் கொள்ளும் பாவத்திற்குப் பயந்து, அப்பாவத்தைத் தவிர்க்கும் வல்லமையை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நன்மையின் ஊற்றே எம் இறைவா, வாழ்வுதரும் வார்த்தைகளை நாங்கள் பேசவும், நலம் தரும் நற்செயல்களில் நாங்கள் ஈடுபடவும், நல்லவற்றையேச் சிந்தித்து, நேர்மையான வழிகளில் எங்களது வாழ்வுப் பாதையை வகுத்துக் கொள்ளும் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இறையாட்சியின் இருப்பிடமே இறைவா, தன்னலத்தைவிட பிறர் நலத்தையும், பாவநிலையைவிட புண்ணிய நிலையையும் தெளிந்துணர்ந்த உம் புனிதர்களைப் போல் நாங்களும் பிறரன்புப் பணியிலும் உண்மைக்கும், நேர்மைக்கும், நீதிக்கும் சாட்சி பகரும் தியாக மனதைத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. விண்ணுக்கும் மண்ணுக்கும் தலைவரே இறைவா, இம்மண்ணில் ஆட்சி செய்கின்ற தலைவர்களை ஆசீர்வதியும். இவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து மக்களின் வாழ்வு மேன்மை அடையவும், வாழ்வுரிமையோடு வாழவும் தங்களையே முழுமையாகத் தியாகப்பணியில் அர்ப்பணித்து வாழும் நல்மனதைத் தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## ஆண்டவரின் உருமாற்றமும் நமது உருமாற்றமும்

திரு. விக்டர்

இறைமகன் இயேசுவின் அன்புக்குரியவர்களே, திருவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலத்தில் இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் நமது ஆண்டவர் இயேசுவின் "உருமாற்றம்" விழாவினைச் சிறப்பிக்கின்றோம். இந்நிகழ்வானது திருவிவிலியத்தில் மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவராலும் எடுத்தியம்பப்பட்டுள்ளது (மத் 17:1-8, மாற்கு 9: 2-13, லூக் 9: 28-36). ஆண்டவரின் இந்த உருமாற்ற நிகழ்வு நமது வாழ்வில் என்னென்ன மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்று சிந்திக்கப் போகின்றோம். திருவிவிலியத்தில் உள்ள அனைத்து நிகழ்வுகளுமே நிறை வாழ்வை நோக்கிய பயணத்தில் நம்மை பண்படுத்தி அழைத்துச் செல்வனவாக அமைந்துள்ளன (யோவான் 20:31). இதற்காக மாத்திரமே இவைகள் நமக்காக எழுதி வைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இயேசுவின் உருமாற்றம் நமக்குத் கற்றுத்தருகின்ற பாடங்களை இப்போது பார்ப்போம்.

ஆண்டவர் இயேசுவின் உருமாற்றத்தில் பின்வரும் நான்கு நிகழ்வுகளைத் திருவிவிலியத்தில் வாசிக்கின்றோம் (மத் 17:1-8).

1. ஒளிமயமான மேகம் அங்கே அவர்களை நிழலிட்டது
2. இயேசுவின் முகம் கதிரவனைப்போல் ஒளிவீசியது, அவரது ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின
3. பிதாவின் குரல் கேட்கிறது
4. எலியாவும், மோசேயும் இயேசுவுடன் பேசிக்கொண்டு இருந்தனர்

**முதலாவது:** ஒளிமயமான மேகம் இயேசுவின்மீது நிழலிட்டது. ஒளிமயமான மேகம் ஆண்டவரது "உடனிருப்பை" அல்லது ஆண்டவரது பிரசன்னத்தைக் குறிப்பதாக உள்ளது. "நான் கார்மேகத்தில் இருந்து உன்னிடத்தில் இறங்கி வந்து மோசேவுக்கு 10 கட்டளைகளை வழங்கியதை நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். மேலும் இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீண்டுவந்தபொழுது பகலில் "மேகத்தூணின்" வழியாக (விப 13:21) இறைவன் அவர்களை வழிநடத்தினார். இவற்றைப் பார்க்கும்பொழுது "மேகம்" என்பது கடவுளின் உடனிருப்பை வெளிப்படுத்தும் அடையாளமாக விளங்கி வந்ததை நாம் அறியலாம். இதுமாத்திரம் அன்று, சாலமோன் அரசன் ஆண்டவருக்கு முதன்முதலாக ஒரு ஆலயத்தைக் கட்டிமுடித்து பலிசெலுத்த முற்படுகையில் அவ்வாலயத்தில் ஆண்டவரின் மாட்சி மேகம் போன்று நிரப்பினதால் குருக்கள் பலிசெலுத்த முடியாத நிலை ஏற்பட்டது (2குறி 5:14).

இப்படி பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில் "மேகத்தின்" வழியாக ஆண்டவரின் மாட்சி வெளிப்பட்டு அவரது "உடனிருப்பை" உறுதிப்படுத்தியதுபோல் புதிய ஏற்பாட்டிலும் நமதாண்டவர் இயேசுவிடம் கடவுள் தமது "உடனிருப்பை" வெளிப்படுத்தியுள்ளார். இப்பொழுது நமது வாழ்வில் ஆண்டவரின் "உடனிருப்பு" எவ்வாறு உள்ளது? ஆண்டவரின் ஆவி என்மேலே அவர் என்னை அருட்பொழிவு செய்துள்ளார் (லூக் 4:18) என்று நம்மால் சொல்லமுடியுமா? கடவுளின் இந்த உடனிருப்பை இயேசு எவ்வாறு பெற்றார் என்று சற்று பார்ப்போம். இயேசு தமது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பிதாவோடு இணைந்து நெருங்கிய உறவு கொண்டிருந்தார் என்று உறுதியாகச் சொல்லலாம். அவர் மலையின்மேல் ஏறி தனித்து செபித்தார் (மத் 14:23). பாடுகளுக்கு முன்பாக கெத்சமணி தோட்டத்தில் செபித்தார் (மத் 26:39). அதிகாலையில் இருட்டோடே எழுந்து வனாந்திரமான இடத்தில் செபித்தார் (மத் 1:35). ஒரு மாலையில் இரவு முழுவதும் செபம் செய்தார் (லூக் 6:12). இப்படி இயேசு பிதாவோடு தனிப்பட்ட விதத்தில் உறவு கொண்டிருந்ததால்தான் பிதாவும் "மேகம்" வழியாக தமது "உடனிருப்பை" வெளிப்படுத்தினார்.

ஆண்டவரோடு தனித்திருந்து செபிப்பதை, உறவு கொள்வதை, திருவிவிலியம் வாசிப்பதை ஆண்டவர் பெரிதும் விரும்புகிறார். எனவே நாம் நமது வாழ்வில் ஆண்டவரோடு தனித்திருக்க ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவோம். அந்த குறிப்பிட்ட நேரத்தில் அவரோடு இணைந்திருப்பதை தவறாமல் ஒவ்வொரு நாளும் செய்வோம். நாம் மறந்தாலும் நம்மை

மறவாத ஆண்டவர் அந்த நேரத்தில் நமக்காகக் காத்திருப்பார். எனவே ஆண்டவரைக் காத்திருக்க வைக்காதபடி, குறித்த நேரத்திற்கு முன்பே நாம் ஆயத்தமாகி ஆவலுடன் காத்திருப்போம். அப்பொழுது ஆண்டவர் நம்மோடு "உடனிருப்பார்" நாமும் உருமாற்றம் பெறுவோம்.

**இரண்டாவது:** இயேசுவின் முகம் கதிரவனைப்போல் மாறியது, அவரது ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின. கடவுள் ஒளியாய் இருக்கின்றார் (1யோவா 1:5). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கண்களுக்குப் புலப்படாத கடவுள் நம் கண்களுக்குப் புலப்படும் விதத்தில் இங்கு வெளிப்பட்டுள்ளார். கடவுளிடமிருந்து பேரரசன் தாவீது தமது திருப்பாடலில் சொல்லும் பொழுது பேரொளியை ஆடையாக அணிந்துள்ளார் (திபா.104:2) என்று உரைக்கின்றார். நானே உலகின் ஒளி (யோவா 8:12) என்று இயேசு தன்னைக்குறித்து சொல்லுகிறார். வாக்கு ஒளியாய் இருந்தது, அந்த ஒளி மனிதருக்கு ஒளியாய் இருக்கிறது (யோவா 1:4) அவரிடம் சேர்கிற நம்மையெல்லாம் ஒளிர்விக்கிற ஒளியாய் (யோவா 1:9) இயேசு இருப்பதை நாம் திருவிவிலியத்தில் அறிகிறோம். நாம் அவருடையவர்களானதால், அவர் நம்மைப் பார்த்து "நீங்கள் உலகின் ஒளி" என்று (மத் 5:14) கூறுகிறார். அதுமாத்திரம் அன்று ஆண்டவரின் ஒளியாக மாறியுள்ள நாம் செய்யும் நற்செயல்களால் பிறர் பரலோக பிதாவை மகிமைப்படுத்தும்படி (மத் 5:16) நம்முடைய ஒளி மனிதர்முன் ஒளிரவேண்டும் என்றும் ஆண்டவர் எதிர்ப்பார்க்கிறார்.

**மூன்றாவது:** "இவரே என் அன்பார்ந்த மகன் இவரில் நான் பூரிப்படைகின்றேன், இவருக்கு செவிசாயுங்கள்" (மத் 17:5). ஆண்டவராகிய கடவுள் மனிதனைத் தனது சாயலாக உண்டாக்கினார். ஆனால் கீழ்ப்படியாமையினால் மனிதன் தனது தெய்வச் சாயலை இழந்தான். இழந்துபோன தெய்வச் சாயலை மனிதன் மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி ஆண்டவர் அநேக தலைவர்களையும், தீர்க்கதரிசிகளையும், இறைவாக்கினர்களையும் அனுப்பி பலிகள் வழியாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட கடவுள் உபாயங்களைக் கற்றுத்தந்தார், சட்டங்களை இயற்றித்தந்தார். எவற்றின் வழியாகவும் மனிதன் தான் இழந்த "தெய்வச் சாயலைப்" பெற்றுக்கொள்ள முடியவில்லை. இயேசுவின் பரிசுத்த இரத்தம் மட்டுமே இச்செயல் செய்ய முடியும் என்பதால்தான் கடவுள் தம் மகன் இயேசுவை உலகிற்கு அனுப்பி, இரத்தம் சிந்தவைத்து, மரிக்கச்செய்து நம்மை மீட்டார். இயேசு இந்த மீட்புச் செயலைத் துவங்கியபொழுது "இவரே என் அன்பார்ந்த மகன் இவருக்குச் செவிசாயுங்கள்" (மத் 3:17) என்று நற்சான்று கொடுத்த கடவுள் இப்பொழுது அவரது பணியில் திருப்தியடைந்த கடவுள் "இவரில் நான் பூரிப்படைகிறேன்" (மத் 17:5) என்று கூறி நற்சான்று வழங்கியுள்ளார்.

நமது வாழ்வு ஆண்டவர் பிரியப்படும்படி உள்ளதா? அவர் விரும்புகிற செயல்களை அவர் விரும்புகிற விதத்தில் செய்கின்றோமா?

இறைவார்த்தையை வாசியுங்கள் (கொலோ 4:11) இறைச்சித்தத்தை அறியுங்கள் (எபே 5:17) ஆண்டவரின் சாட்சிகளாக வாழுங்கள் (திப 1:8) அவரது நற்செய்தியை உலகமெங்கும் அறிவியுங்கள் (மத் 28:20) இவைதான் ஆண்டவர் நம்மிடம் எதிர்ப்பார்க்கும் செயல்பாடுகள்.

**நான்காவது:** எலியாவும் மோசேயும் இயேசுவுடன் அவரது இறுதிப் பயணம் குறித்து உரையாடினார் (லூக் 9: 30-31). நான்காவது எலியாவும், மோசேயும் ஆண்டவருக்காக தங்கள் வாழ்வை மாற்றிக் கொண்டவர்கள். ஆண்டவர் விரும்பினதை அவர் விரும்பிய விதமாகவே செய்து முடித்தார்கள். அவர்கள் இருவருடைய மரணமும் இயற்கையாக ஏற்படவில்லை. மோயீசன் கடவுளின் வார்த்தையின்படியே மரித்தார் (இச 34:5,6) அப்படியே எலியாவும் அக்கினி இரதத்தில் ஏறிச்சென்றார் (2அர 2:11). இவர்கள் இருவருமே இயேசுவின் மீட்புச் செயலை எதிர்நோக்கி ஏங்கி காத்திருந்தவர்கள். ஏனெனில் இயேசு தமது இரத்தத்தினால் பரலோகத்திற்குப் பாதை அமைத்துக் கொடுத்தார் (எபி 10:20) அந்த பாதையில் பயணப்பட இருவரும் காத்திருந்தார்கள். தங்கள் இருவரது பணிகளும் இயேசுவின் சிலுவைப் பலியினால்தான் நிறைவுறப்போகின்றன என்பதை நன்கு அறிந்ததால் அவர்கள் இயேசுவுடன் உரையாடினார்கள்.

இயேசு நமக்கு அமைத்துத் தந்த இந்த பரலோகப் பாதையில் பயணப்பட ஆயத்தமாய் இருக்கிறோமா? வாழ்வுக்குச் செல்லும் வழியில் இடுக்கமும், நெருக்கமுமாய் இருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர் மட்டுமே (மத் 7:14). நாம் அவரது அன்புக்குரிய இறைமக்களானால் அவரது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்துக்கொள்வோம் (எபே 4: 24). பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, அன்பு, பொறுமை ஆகிய பண்புகளை அணிந்துக்கொள்வோம் (கொலோ 3:12). உலகினில் தீமைகள் ஒழியட்டும், உன்னத ஒளியாக ஒளிரட்டும், உலகினர் ஓரணியில் திரளட்டும், ஒப்பில்லா தேவன்போல் வாழட்டும்.

## மரியாளின் அரசு எத்தகைய அரசு?

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

உலகில் பலவித அரசுகள் ஆட்சிகள் தோன்றின, ஒரு நிலையான அரசு இருக்கிறது என்றால் அது விண்ணக அரசு மட்டுமே. தந்தையாம் கடவுள்தான் இந்த விண்ணக அரசை உருவாக்கியவர். அவர்தான் படைப்புகளுக்கெல்லாம் ஊற்று. அத்தகைய அரசர் தம் ஒரே மகனாகிய இயேசுவை அரசராய் அமர்த்தியது மட்டுமல்லாமல், தன்னுடைய மீட்புத்திட்டத்தில் மகனும் பங்கு பெறுவதன் அடையாளமாக அவரிடம் அதிகாரத்தைக் கொடுத்தார். கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிய பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி,

சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே "இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர், மேலுலகோர் அனைவரும் மண்டியிடுவர்" (பிலி 2:6-10). விண்ணகத்தில் அரசராயிருப்பவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே.

இறையரசின் தொடக்க அழைத்தலுக்கும், தமது புதிய அழைத்தலுக்கும் தந்தைக கடவுள், இயேசுவை முன் குறித்திருந்தார். இயேசு கிறிஸ்து கடவுளால் அனுப்பப்பட்டதைப்போன்று கிறிஸ்துவைச் சென்றடைவதற்கான இணைப்புப் பாலங்களாக பல மக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்பாலங்களில் மரியன்னைதான் கிறிஸ்து பிறப்புக்கு முன் கிறிஸ்துவுக்காக அமைந்த இறுதி இணைப்புப் பாலம். அதோடு புதிய ஏற்பாட்டு திருவெளிப்பாட்டில் யோவான் கீழ்க்கண்டதைக் குறிப்பிடுகிறார். "வானில் பெரியதொரு அடையாளம் தோன்றியது, பெண் ஒருவர் காணப்பட்டார், அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார், நிலா அவருடைய காலடியில் இருந்தது, அவர் பன்னிரு விண்மீன்களைத் தலையில் சூடியிருந்தார்" (திவெ. 12:1).

திருவிவிலியத்தின் தொடக்க நூலிலும் கீழ்க்கண்டவற்றைக் காண்கிறோம். "அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்" (தொ. நூ 3:15). எனவே ஆதியிலிருந்தே கடவுள் மரியன்னையை மீட்புத் திட்டத்தில் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த அழைப்புக்காக தேர்ந்தெடுத்தார் என்பது புலனாகிறது. தொடக்கத்திலிருந்தே மரியாள் அருள் வடிவம் கொண்டிருந்தாள். லூக்கா சொல்வதுபோல் "அருள் மிகப்பெற்றிருந்தார்" (லூக் 1:28). இந்நிலை ஜென்மப் பாவம் இல்லாத நிலையாகும். இத்தகு அன்னைமரியா இறைவனின் அழைப்பை ஏற்று ஆம் என்று சொல்லி இறைத்திட்டத்தில் இணைந்திருக்கும் நற்பேறுபெற்றாள். கருவறைமுதல் கல்லறைவரை இயேசுவோடு பயணித்தாள். இத்தகைய திறந்த மனத்திற்கும் தியாக உள்ளத்திற்கும் பரிசாக தந்தை கடவுள் அவரை விண்ணகம் எடுத்துக்கொண்டார்.

திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1950ம் ஆண்டு மரியாளின் விண்ணேற்பை விசுவாசக் கோட்பாடாய் பிரகடணப்படுத்தினார். "மரியா இறைவனின் மாசற்றத்தாய், மண்ணக வாழ்வின் பயணம் முடிந்தபோது, உடலோடும், ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இதனை இறைவனால் அறிவிக்கப்பட்ட விசுவாசக் கோட்பாடாய் அறிவிக்கிறோம், பறைச்சாற்றுகிறோம், மற்றும் வரையறுக்கிறோம்". இதன்மூலம் கிறிஸ்து விண்ணகம் சென்றதை விண்ணேற்றம் என்றும், மரியாள் விண்ணகம் எடுத்துச்செல்லப்பட்டதை மரியாளின் விண்ணேற்பு என்றும் திருத்தந்தைத் தெளிவுப்படுத்துகிறார்.

அன்னையின் விண்ணேற்பு மரியா என்ற தனிநபருக்கு இறைவன் தந்த கொடை மட்டுமன்று. மாறாக, முழுத்திருச்சபையும் இனி அடையவிருக்கும் அந்த மாபெரும் மகிழ்ச்சியூட்டும் மகிமைக்கு முன்னடையாளமாகவும், முன்னோட்டமாகவும் அமைந்துள்ளது. விண்ணகம் எடுத்துச் செல்லப் பட்ட மரியாளை, விண்ணக அரசி என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விதமாக செபமாலையின் 5வது மகிமைநிறை பேருண்மையில் "கன்னிமரியாள் விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டதை" தியானித்து கன்னிமரியாளின்மீது உண்மையான பக்தி எனும் வரத்தைக் கேட்டு செபிக்கிறோம். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இதனை விசுவாசக் கோட்பாடாய் பிரகடணப்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் அரசர்கள் பல பெண்களை மணந்திருந்ததனால் யாரையும் அரசியாக்க முடியாமல் போயிற்று. அதனால் அவர்களின் தாயாரை அரசியாக தன் வலதுபக்க அரியணையில் அமரச் செய்து அவரின் ஆலோசனையைப் பெற்று ஆட்சி புரிந்து வந்தனர். உதாரணம், சாலமோன் அரசன் தன் தாய் பத்சேபாவை அவரின் அரியணைக்குப் பக்கத்து அரியணையில் அமரச் செய்தார் (1அர 2:17-25). தாயின் மூலமாகத்தான் அரசரிடம் வேண்டியதை மக்கள் பெற்று வந்தனர்.

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மானிட மகனாக தந்தையின் முன்னிலையில் நமக்காகப் பரிந்துப்பேசுவதைப்போல், அன்னை மரியாவும் நமக்காகப் பரிந்து பேசுகிறார். அந்தப் பரிந்துப் பேசுதலின் வழியாக நாம் கடவுளின் நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறோம். இப்படி பெரும் அரசாகக் கட்டியெழுப்பப்பட்ட இறையரசை கிறிஸ்துவத்தை அடியோடு அழிக்க வேண்டுமென்று நீரோ, டிரானான், செப்திமூஸ், தீசியஸ், டயோக்ளியசின் என்ற பேரரசர்கள் பெரும்பாடுபட்டார்கள். கிறிஸ்து அரசை கிறிஸ்தவத்தை அன்று மட்டுமன்று, இன்றும் மதவாத சக்திகள், தீவிரவாதிகள், கிறிஸ்தவ கோயில்களை, பள்ளிகளை, ஆயர்களை, குருக்களை, கன்னியர்களை, கிறிஸ்தவர்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அன்று அழிக்க முயன்றவர்கள் அழிந்து போயினர். இப்போது கலகங்கள், தீவிரவாத செயல்கள் நடத்தப்பட்டாலும், கிறிஸ்தவம் அழியாது, மறையாது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த அரசை அழியவிடமாட்டார். அரசை உயர்த்துவார், மேலும் கட்டியெழுப்புவார். ஆம், என்றும் நிலைத்திருக்கும்.

எனவே, நீடித்த நிலையான பேரின்ப இறையாட்சியில் பங்குபெற இறுதித் தீர்ப்பின்போது (மத் 25:31-40) அரியணையில் வீற்றிருக்கும் அரசரின் "என் தந்தையிடமிருந்து ஆசிபெற்றவர்களே வாருங்கள்" என்ற வார்த்தையைக் கேட்க கடவுளின் வலப்புறம் நிற்க வேண்டியவர்கள் நாம் என்ற எண்ணம் எப்போதும் கொள்வோம்.

## புனித அகுஸ்தினார்

திரு. ஜான் அலெக்ஸ்

கி.பி.354ல் பிறந்த இப்புனிதர் ஆரம்ப காலத்தில் பிற தெய்வங்களை வணங்கியவராக வாழ்ந்து வந்தவர். ஆனால் தன் தாய் மோனிக்காவின் செயல்முறைகளாலும் முறையான கிறிஸ்துவ வாழ்வு முறையாலும் இவர் கிறிஸ்துவ மறையை ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்றார். அகுஸ்தினாருக்கு ஆரம்பத்திலேயே நல்ல கிறிஸ்தவ கல்வி கிடைத்தது. மேற்படிப்பிற்காக கார்த்தேஜ் அனுப்பப் பெற்றோர் நினைத்தனர். ஆனால் அதற்கான பணம் திரட்டுவதற்குப் பல மாதங்கள் ஆனதால், இடைப்பட்ட காலத்தில் கிடைத்த தனிமையை அகுஸ்தினார் தவறாகப் பயன்படுத்த ஆரம்பித்தார், உலக இன்பங்களில் திளைத்தார், செபிப்பதையும் கைவிட்டார்.

பிறகு கார்த்தேஜில் இவரின் நிலைமை இன்னும் மோசமானது. தாய் மோனிக்கா இவரை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகளுக்கெல்லாம் எதிர்மாறாக சிற்றின்பத்திலும், *மணிக்கேயம்* என்ற தப்பறைக் கொள்கையிலும் ஊறிப்போனார். சீசரோ இலத்தீன் மொழியில் எழுதிய *“ஹேர்டென்சியஸ்”* என்ற நூலை 19ம் வயதில் அகுஸ்தினார் ஆவலுடன் வாசித்தார். அதிலிருந்து உண்மை ஞானத்தைப் பருகிக் கொண்டு இருக்க வேண்டுமென்ற ஆவல் கொண்டார். அதே நேரத்தில் மறைநூலையும் கற்றார். ஆனால் அவரால் அதில் அதிக நாட்டம் கொள்ள முடியவில்லை. தாய் மோனிக்கா தமது மகனுக்காக இடைவிடாது செபித்துக் கொண்டே இருப்பார்.

படிப்பை முடித்து வந்த அகுஸ்தினார் மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார். தமது புலமையின் பயனாகவும் மாணவர்களிடம் பழகிய பண்பினாலும் மாணவர்களது மனம் கவர்ந்தவரானார். இவரால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் பலர் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்க ஆரம்பித்தனர். அவர்களுள் ஒருவர் அலுபியஸ் என்பவர். அகுஸ்தினாரை பின்தொடர்ந்த இவர் மிலான் நகரில் திருமுழுக்குப் பெற்றார். பிற்காலத்தில் அருட்பணியாளராகி ஆயராகவும் உயர்த்தப்பட்டு இறைப்பணியைச் செவ்வனே செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறக்குறைய 9 ஆண்டுகள் மணிக்கேயம் கொள்கையின் மீது பிடிப்புடனும் திசைமாறியும் திரிந்த அகுஸ்தினார், கி.பி.383ல் ஆயர் அம்புரோஸ் அவர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பு அகுஸ்தினாரின் வாழ்வில் மறக்க முடியாத திருப்பு முனையானது. ஆயர் அம்புரோஸின் மறையுரையின் மீது மிகுந்த தாகம் கொள்ள ஆரம்பித்தார். அந்த மறையுரைகளைக் கேட்கத் தவறாது ஆலயம் செல்லுவார். தமது 30ம் வயதில் *மணிக்கேயத்* தப்பறையைச் சிறிது சிறிதாக தவறு என்று உணர ஆரம்பித்தார். ஆனாலும் விரைவில் முடிவு எட்டமுடியாத குழப்பமான சூழல் நிலவியது.

முடிவு தேடி அலைந்த அகுஸ்தினார், 3 ஆண்டுகளுக்குப் பிறகு தெளிவான முடிவை எடுத்தார். மறைநூலை மீண்டும் படித்தார். கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொண்டார். இந்நேரத்தில், "ஆண்டவரே, எனக்குக் கற்பு என்னும் புண்ணியத்தைத் தாரும், ஆனால் சிறிது காலம் தாழ்த்தித் தாரும்" என்று செபித்தார். இதனை இவரே தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஒருநாள் பூங்காவில் இவர் தனியாக அமர்ந்திருந்த போது அங்கிருந்த சிறுவன், "எடுத்து வாசி"... "எடுத்து வாசி" என்று சொல்லியபடியே இருந்தான். சிறிது நேரம் கழித்து அவனது வார்த்தையை நினைத்து சிந்தித்துப்பார்த்தார். உடனே அருகில் இருந்த விவிலியத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். அப்போது அவருடைய கண்ணில்பட்ட இறைவார்த்தை, "இரவு முடியப் போகிறது, பகல் நெருங்கி உள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்துகொள்வோமாக" (உரோ 13:12) என்பதாகும்.

உடனே அகுஸ்தினார் ஆயர் அம்புரோஸியாரைச் சந்தித்தார். அவரின் திருவடிகளில் விழுந்து, இறைவன் தன் தீச்செயல்களை மன்னிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தமது 32ம் வயதில் முற்றிலும் மனமாற்றம் பெற்றவரானார். 36ம் வயதில் அருட்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டு 42ம் வயதில் ஆயராக உயர்த்தப்பட்டார். துறவற வாழ்க்கையை விரும்பி நின்ற பலரையும் சேர்த்து துறவற சபை ஒன்றை நிறுவினார். "உன் வாழ்க்கையில் நீ செய்யும் செயல்களுக்கு நீயே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீ செய்யும் செயல்களுக்கு யாரும் பொறுப்பல்லர். எனவே கண்ணியமாக நடந்து உன் ஆன்மாவை இறை உதவியுடன் மீட்டுக்கொள்" என்று உரைத்தது மட்டுமன்றி வாழ்ந்தும் காட்டினார். புனித அகுஸ்தினார் கி.பி.430 ஆகஸ்ட் 28ம் நாள் இறைபதம் சேர்ந்தார்.

மனமாற்றத்தில் சுகம் உண்டென எத்தனை பேர் சொன்னாலும்
தன்னிலை மாற்றத்தின் மூலமே யாரும் அதை அனுபவிக்க முடியும்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. கிறிஸ்து நம் தோள்களிலிருந்து சிலுவையைத் தானே எடுத்துக் கொண்டு வாழ்வின் சுமைகளிலிருந்து நமக்கு விடுதலை தருபவராக அல்ல, மாறாக நம் சுமைகளை நம்முடன் இணைந்து சுமப்பவராகச் செயல்படுகிறார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். நம்முடைய பிரச்சனைகளுக்கு மாயாஜால வழியில் தீர்வு தருவதற்காக அவர் காத்திருக்கவில்லை. மாறாக, நாம் அந்த பிரச்சனைகளை எதிர்கொள்வதில் உறுதியடைய வேண்டும் என அவர் விரும்புகிறார் என மேலும் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசு நம் வாழ்வில் நுழையும்போது தான் அமைதியும் நுழைகிறது என உரைத்தார்.

2. "இயேசு அவர்களுக்குமுன் போய்கொண்டிருந்தார் (மாற்கு10:32-45) என்ற நற்செய்தியின் சொற்கள், கர்தினால்களாக புதிதாக உருவாக்கப்படும் நிகழ்வுக்குப் பின்னணியாக விளங்குகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் ஐந்து புதிய கர்தினால்களுக்கு மோதிரம், தொப்பி மற்றும் பட்டம் ஆகியவற்றை வழங்கும் நிகழ்வை தலைமையேற்று நடத்திய திருத்தந்தை, அவ்வேளையில் வழங்கிய மறையுரையில் இவ்வாறு கூறினார். இன்று பொறுப்பேற்கும் புதிய கர்தினால்கள், திருஅவையின் இளவரசர்கள் என்று அழைக்கப்பட்டாலும் தன் வலப்புறமும், இடப்புறமும் அமர்வதற்கு இவர்கள் அழைக்கப்படவில்லை என்றும், மாறாக சிலுவைகளைச் சுமக்க எருசலேமுக்கு இயேசு இவர்களை அழைக்கிறார் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மறையுரையில் வலியுறுத்திக் கூறினார்.

3. ஆண்டவரின் இறுதி இராவுணவை நினைவுகூரும் திருநற்கருணைக் கொண்டாட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் அப்பம் மற்றும் திராட்சை இரசம் குறித்து உலகின் அனைத்து ஆயர்களுக்கும், கடிதம் ஒன்றை திருஅவை அனுப்பியுள்ளது. திருப்பீடத் திருவழிபாடு மற்றும் அருளடையாளப் பேராயம். திருப்பலியில் பயன்படுத்தப்படும் அப்பம் மற்றும் திராட்சை இரசத்தை அண்மைக் காலமாக சில துறவற குழுக்களே தயாரித்து வந்த வேளையில் தற்போது இவை பல்பொருள் அங்காடியிலும் ஏனையக் கடைகளிலும் வலைத்தளத்திலும் கூட கிடைக்கின்றன எனவும் இப்பேராயம் கூறியுள்ளது. திருப்பலிக்கென ஓஸ்தி மற்றும் திராட்சை இரசத்தைத் தயாரிப்பவர்கள், இவை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து நேர்மை, பொறுப்புணர்வு மற்றும் தகுந்த மரியாதையோடு தயாரிக்க வேண்டுமெனவும், ஆயர் பேரவைத் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது இப்பேராயம். இக்கடிதம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளின் பேரில் அனுப்பப்பட்டுள்ளதாக, திருப்பீடத் திருவழிபாடு மற்றும் அருளடையாளப் பேராயம் கூறியுள்ளது.

4. முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள இந்தோனேசியாவில், கத்தோலிக்க இளையோர் எவ்வாறு தங்கள் விசுவாசத்தில் வாழ்கின்றனர் என்பதைக் கண்டுணர ஆசிய இளையோர் தினம் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். ஜூலை மாதம் 30ம் தேதி முதல் ஆகஸ்ட் 6ம் தேதிவரை, இந்தோனேசியாவின் யோகார்த்தாவில் நடைபெறவிருக்கும் 7வது ஆசிய இளையோர் தினத்தில் கலந்துகொள்ளும் பிலிப்பைன்ஸ் இளையோர் பற்றி ஆசியச் செய்தியிடம் பேசிய பிலிப்பைன்ஸ்

ஆயர் பேரவையின் இளையோர் பணிக்குழு அதிகாரி ஸ்டீபன் போர்ஹா அவர்கள் இவ்வாறு கூறினார். இந்த ஆசிய இளையோர் தினத்தில் கலந்துக்கொள்வதன் வழியாக, பிலிப்பைன்ஸ் இளையோர் பிரதிநிதிகள், தங்களின் விசுவாசத்தை மேலும் உறுதிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார் ஸ்டீபன் போர்ஹா. ஆசியாவின் பல்வேறு நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான இளையோர், தங்களின் ஆன்ம வழிகாட்டிகள் மற்றும் ஆயர்களுடன் இதில் கலந்துக்கொள்ள உள்ளனர். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆசிய இளையோர் நாள் சிறப்பிக்கப்படுகின்றது.

5. இந்தியாவில், ஒவ்வொர் ஆண்டும், ஆகஸ்ட் முதல் ஞாயிறை தேசிய கத்தோலிக்க இளையோர் நாளாகச் சிறப்பிக்குமாறு கூறியுள்ளது இந்திய ஆயர் பேரவையின் இளையோர் பணிக்குழு. இந்திய இளம் கத்தோலிக்கரை ஒன்றிணைக்கவும் நற்செய்திக்குச் சான்று பகரவும் ஊக்குவிக்கும் நோக்கத்தில் மறைமாவட்ட அளவில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் முதல் ஞாயிறன்று இளையோர் நாள் சிறப்பிக்கப்படும் என இப்பணிக்குழு அறிவித்துள்ளது.

6. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின், 2017ம் ஆண்டின் திருத் தூதுப் பயணம் பற்றி, பிரதமர் நரேந்திர மோடி அரசு இடம்பெற்று வரும் உரையாடல்கள், எதிர்ப்பார்த்தைவிட நீண்ட காலம் எடுக்கின்றது என கர்தினால் கிரேசியஸ் அவர்கள் கூறியதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுக்கு 2017ம் ஆண்டில் திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம் இடம்பெறும் என்பதில் தான் நம்பிக்கை இழக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ள கர்தினால் கிரேசியஸ் அவர்கள், இந்த ஆண்டில் வைத்துக்கொள்ளலாம் என அரசு திடீரெனக் கூறினாலும் இது மேய்ப்புப்பணி சார்ந்த பயணமாக இருப்பதால், மறைமாவட்டங்கள் அளவில் தயாரிப்புகள் நடைபெற காலம் போதாது என்றார். 1999ம் ஆண்டில் புனித திருத்தந்தை 2ம் ஜான்பால் அவர்கள், இந்தியாவுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டபோது ஆயர்கள் ஓராண்டிற்கு முன்னரே தயாரிப்புக்களைத் தொடங்கினர் எனவும், கர்தினால் கூறியதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

7. துறவற வாழ்வுக்கு இறையழைத்தல்களை ஊக்குவிக்கும்போதும், துறவு இல்லங்களில் பணியாற்றுவதற்கு ஆட்களைத் தெரிவு செய்யும்போதும் மிகவும் கவனத்துடன் செயல்படுமாறு இந்திய இருபால் துறவு சபைகளின் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியாவில் தற்போது நிலவிவரும் சூழலில், சட்டத்திற்குப் புறம்பே மதமாற்றம் என எளிதாகக் குற்றம் சாட்டப்படும் போக்குத் தெரிவதால், துறவற வாழ்வில் சேரவிரும்புகின்றவர்களைத் தெரிவு செய்யும்போது கவனத்துடன் செயல்படுமாறு துறவு சபைகளைக் கேட்டுக்கொண்டுள்ளது அந்த அமைப்பு.

## சுடர் வாசகர் போட்டி - 38

1. எந்த புனிதையின் துறவற வாழ்வைப் பார்த்து அவரது தாய்த், தங்கைகளும் துறவறத்தில் சேர்ந்தனர்?
2. பர்த்தலமேயு என்ற பெயரின் பொருள் என்ன?
3. தூய அகுஸ்தினார் தனது எந்த வயதில் கிறிஸ்துவத்தை ஏற்றுக்கொண்டார்?
4. ஆண்டவரின் உருமாற்றத்தில் தோன்றும் மேகம் எதைக் குறிப்பதாக ஆசிரியர் கூறுகிறார்?
5. பழைய ஏற்பாட்டில் தன் தாயைத் தனது வலதுப்பக்கத்தில் அரியணையில் அமரச்செய்த அரசர் யார்? அந்தத் தாய் யார்?
6. தூய அகுஸ்தினார் எந்த வயதில் ஆயரானார்?
7. "இறைவனையே தன் கருவறைக்குள் சுமந்து நின்ற மரியே" கூறியது யார்?
8. "தூய குருவே உமது திருத்தொண்டர் இல்லாது நீர் மட்டும் செல்வதேன்" யார் யாரிடம் கூறியது?
9. அரசியான தூய கன்னி மரியாவின் விழாவை அறிமுகப்படுத்திய திருத்தந்தை யார்?
10. 7வது ஆசிய இளையோர் தினம் எங்கு எப்பொழுது நடக்க இருக்கிறது?
11. பழைய புதிய ஏற்பாட்டை இணைக்கும் இறைவாக்கினர் யார்?
12. மரியாளின் விண்ணேற்பை விசுவாசக் கோட்பாடாய் பிரகடணப்படுத்தியவர் யார்?
13. "எடுத்து வாசி" என்ற வார்த்தைக் கேட்டு விவிலியத்தை எடுத்து வாசித்து தனது வாழ்வில் மாற்றத்தைப் பெற்ற புனிதர் யார்?
14. கர்தினால்களை இயேசு தன் வலப்புறமும், இடப்புறமும் அமர அழைக்கவில்லை. மாறாக, எதற்காக அழைப்பதாகத் திருத்தந்தை கூறுகிறார்?
15. இயேசு தன் பணிக்குத் தலைவனாக எப்படிப்பட்டவரைத் தேர்ந்தெடுப்பதாக ஆசிரியர் கூறுகிறார்?

## சுடர் வாசகர் போட்டி - 37 சரியான விடைகள்

1. தூய இஞ்ஞாசியார்
2. அன்னகுட்டி
3. தனது சகோதரன் ஸ்டீபன் வீட்டில்
4. திருத்தந்தை பிரான்சிஸ்
5. தூய பெனடிக்ட்
6. திருத்தந்தை பிரான்சிஸ்
7. மாட்சிமையில் பங்குபெற அழைக்கிறார்
8. தூய இஞ்ஞாசியார்
9. தூய அல்போன்சா
10. தந்தை லூயிஜி, தாய் அசுந்தா
11. தூய தாமஸ் அக்குவினாஸ்
12. சிறப்பு மறைப்பணியின் மாதமாக சிறப்பிக்க
13. 19ஆம் வயதில்
14. தூய பெனடிக்ட்
15. 1534 ஆம் ஆண்டு தூய இஞ்ஞாசியாரால் உருவானது

### பரிசு பெற்றவர்கள்

செல்வன். **A.** ஆரோன், திருச்சி
திரு. செல்வம், வேளச்சேரி
திரு. ரேமன்ஸ், பெரம்பூர்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஆகஸ்டு 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1 வழிபாட்டு வழிக்காட்டி

தூய கன்னி மரியாவின் பிறப்பு
தூய பீட்டர் க்ளாவர் மறைப்பணியாளர்
தூய யோவான் கிறிசோஸ்தோம் ஆயர்
தூய மரியாவின் துயரங்கள் (வியாகுலஅன்னை)
தூய மத்தேயு நற்செய்தியாளர்
பிட்ரலினா நகர் பியோ
தூய வின்சென்ட் தெ பவுல் மறைப்பணியாளர்
தூய மிக்கேல், கபிரியேல், ரபேல் அதிதூதர்கள்
தூய எரோணிமுஸ்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

தூய மத்தேயு - வாழ்வு தரும் பாடம்
தூய எரோணிமுஸ் - விவிலிய பார்வை
தூய வின்சென்ட் தெ பவுல் - சேவையின் வரலாறு
பொதுக்கால ஞாயிறுகள்
திருச்சபைச் செய்திகள்

### தீபகச் சுடர்

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## ஆகஸ்டு மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செ | புனித அல்போன்ஸ் மரிய லிகோரி | வி.ப33:7-11,4:5ஆ9,28 | மத் 13:36-43 |
| 2 | பு | புனித யுசேபியுஸ் | வி.ப. 34: 29-35 | மத் 13: 44-46 |
| 3 | வி | | வி.ப.40: 16-21, 34-38 | மத் 13: 47-53 |
| 4 | வெ | புனித ஜான்மரிய வியான்னி | லேவி23:1,4-11,15-16,27, 34ஆ-38 | மத் 13: 54-58 |
| 5 | ச | தூய கன்னிமரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு (பனிமயமாதா) | லேவி 25: 1.8-17 | மத் 14: 1-12 |
| 6 | ஞா | ஆண்டவரின் தோற்றம் உருமாற்றம் | I. தானி. 7:9-10,13-14<br>II. 2பேதுரு 1:16-19 | மத் 17: 1-9 |
| 7 | தி | | எண் 11: 4ஆ-15 | மத் 14: 13-21 |
| 8 | செ | புனித தோமினிக்/புனித வனத்து சின்னப்பர் | எண் 12:1-13 | மத் 14: 22-36 |
| 9 | பு | | எண் 13:1-2,25-14:1, 26-30,33-35 | மத் 15: 21-28 |
| 10 | வி | புனித லாரன்ஸ் | 2கொரி 9:6-10 | யோவா12:24-26 |
| 11 | வெ | புனித கிளாரா | இ.ச. 4:32-40 | மத் 16: 24-28 |
| 12 | ச | புனித ஜான் பிரான்சிஸ்கா | இ.ச. 6:4-13 | மத் 17: 14-20 |
| 13 | ஞா | ஆண்டின் 19ம் ஞாயிறு | I.1அர 19:9அ.11-13அ<br>II. உரோ 9: 1-5 | மத் 14: 22-33 |
| 14 | தி | புனித மாக்சிமிலியன் கோல்பே | இ.ச. 10:12-22 | மத் 17: 22-27 |
| 15 | செ | தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு<br>தாயகத்தின் 71வது சுதந்திர நாள் | I. தி.வெ.11:19அ,12:1-6 அ.10அஆ<br>II. 1கொரி.15:20-26 | லூக் 1: 39-56 |
| 16 | பு | அங்கேரி நாட்டு புனித ஸ்தெபான் | இ.ச. 34:1-12 | மத் 18: 15-20 |
| 17 | வி | | யோசுவா 3:7 10அ,11, 13-17 | மத் 18: 21-19:1 |
| 18 | வெ | | யோசுவா 24: 1-13 | மத் 19: 3-12 |
| 19 | ச | | யோசுவா 24:14-29 | மத் 19: 13-15 |
| 20 | ஞா | ஆண்டின் 20ம் ஞாயிறு | I. எசா 56:1.6-7<br>II. உரோ11:13-15,29-32 | மத் 15: 21-28 |
| 21 | தி | திருத்தந்தை புனித பத்தாம் பத்திநாதர் | நீ.த. 2: 11-19 | மத் 19: 16-22 |
| 22 | செ | அரசியான தூய கன்னிமரியா | எசா. 9:2-4ஈ 6-7 | லூக் 1: 26-38 |
| 23 | பு | | நீ.த. 9: 6-15 | மத் 20: 1-16 |
| 24 | வி | புனித பர்த்தலமேயு | தி.வெ. 21:9ஆ-14 | யோவா 1:45-51 |
| 25 | வெ | | ரூத் 1:1,3-6,14ஆ-16,22 | மத் 22: 34-40 |
| 26 | ச | | ரூத். 2:1-3,8-11,4:13-17 | மத் 23: 1-2 |
| 27 | ஞா | ஆண்டின் 21ம் ஞாயிறு | I. எசா. 22:19-23<br>II. உரோ 11:33-36 | மத் 16: 13-20 |
| 28 | தி | புனித அகுஸ்தினார் | 1தெச 1:1-5,8-10 | மத் 23: 13-22 |
| 29 | செ | திருமுழுக்கு யோவானின் பாடுகள் | எரே. 1:7-19 | மாற்கு 6: 17-29 |
| 30 | பு | | 1தெச 2:9-13 | மத் 23: 27-32 |
| 31 | வி | | 1தெச 3: 7-13 | மத் 24: 42-51 |